# தேவாரத்தில் பல்லுயிர்ப் பெருக்கச் சிந்தனைகள்

4

**முனைவர் கோ.ப. நல்லசிவம்**

**இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்,**

**மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

**ஆய்வுச் சுருக்கம்**

இயற்கையைப் பாதுகாக்க வேண்டும், பல்லுயிர்ப் பெருக்கத்தை உறுதி செய்ய வேண்டும் என்கிற சிந்தனைகள் இன்று எழுந்ததல்ல. நம்முடைய முன்னோர்கள் பண்டு தொட்டு வலியுறுத்தி வருவதாகும். இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் நம் பண்டைத் தமிழர். ஆயின் இன்று நாம் சுகமாக வாழ வேண்டும் என்பதற்காக இயற்கையை அளவுக்கு மீறி துய்ப்பதோடு மட்டுமல்லாமல் அழிக்கவும் செய்கிறோம். இயற்கை எனும் பல்லுயிர்ச் சூழலியலை மாற்றி விட்டால் அதுவே இயற்கையின் பெருஞ்சீற்றத்திற்குக் காரணமாக அமைந்துவிடுகிறது. உயிரின வளர்ச்சியில் தாறுமாறான செயல்பாடுகள் தோன்றுகின்றன. காடுகள் பெருமளவில் அழிக்கப்படுவதால் மனிதர்கள் வாழிடங்களை நோக்கி விலங்குகள் ஊடுருவத் தொடங்குகின்றன. நாம் செய்யும் விலங்குகளின் வாழிடத் தொந்தரவுகளாலேயே இடம்பெயர்வுகள் நிகழ்கின்றன என்பதை சூழலியலாளர்கள் கவலையோடு பதிவு செய்கிறார்கள்.

அளவுக்கதிகமான அறிவியல் தொழில் நுட்பங்களால் சிற்றுயிர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவதோடு முற்றிலும் அழியும் நிலையும் தொடர் நிகழ்வாக உலகெங்கிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், உணவுப்புரட்சி என்ற போர்வையில் இயற்கைச் சுரண்டல்கள்தான் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்கிற கசப்பான உண்மையை உணரவேண்டும். சூழல் இயற்கையோடு இயைந்திருந்தால் மட்டுமே வருங்காலத் தலைமுறை ஆரோக்கியமான காற்று, நீர், உணவு ஆகியவற்றைப் பெற முடியும். இல்லையேல் இன்று குடிநீரையும் உணவையும் விலைக்கு வாங்குவது போல காற்றையும் விலைக்கு வாங்கித் துய்க்கும் நிலை மானுட சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்டுக் கட்டாயமாக்கப்பட்டுவிடும். அதற்கும் பன்னாட்டு முதலாளிகளும் நிறுவனங்களும் இப்போதே தயாராகிவிட்டதை நாம் உணர்ந்து விழிப்புணர்வு கொள்ள வேண்டும். இன்று எதையும் காசாக்கும் வியாபார யுகத்தில் பயணிக்கத் தொடங்கிவிட்டோம். நம் உடலும் சிறிது சிறிதாக அதற்கேற்றவாறு பழகத் தொடங்கிவிட்டது என்பதே மறுக்கமுடியாத உண்மை. இச் சூழலியல் குறித்த புரிதலையும், பல்லுயிர்ப்பெருக்கத்தின் அவசியத்தையும் தேவாரப் பாடல்களின் வழி இக்கட்டுரை விளக்கமுயல்கிறது.

**திறவுச்சொற்கள்**

பல்லுயிர்ப்பெருக்கம், நுகர்வுக்கலாச்சாரம், பெருநுகர்வு, உலகமயமாக்கல், வணிகமயமாக்கல், பன்னாட்டு வர்த்தகம், புவி வெப்பமடைதல், சிற்றுயிர்அழிவு, நுண்கதிர்வீச்சு, கதிர்வீச்சுக்கருவிகள்

பெருக்கம், நெகிழிப் பயன்பாடு, தொழில்நுட்பத்தின் அபரித அசுர வளர்ச்சி, மரங்கள், இயற்கை அழிப்பு.

**முன்னுரை**

மனிதன் தான் மட்டும் வாழ இயற்கையோடு உறவாடி அழிக்கிறான் என்பதே இன்றைய சூழலில் உண்மையாக இருக்கிறது. எதைப் பற்றியும் கவலையில்லை தன்னுடைய மகிழ்ச்சி மட்டுமே குறிக்கோள் எனப் பழகிவிட்டதன் விளைவு இன்று இயற்கையின் பேரழிவு, இயற்கையின் முறைமாறிய சீற்றங்கள், பலவிதமான தொற்று நோய்கள் போன்றன.

செல்பேசி, குளிர்சாதப்பெட்டி, குளிரூட்டி, நுண்கதிர்வீச்சு மருத்துவக் கருவிகள் போன்ற கதிர்வீச்சுக் கருவிகளின் பெருக்கம் பல்லுயிர்ப் பெருக்கத்தை முற்றிலுமாகக் கொன்று வருகின்றன என்பதை எப்போது புரிந்து கொள்ளப்போகிறோம்? நெகிழி எனப்படும் பிளாஸ்டிக்; மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள், உரம் போன்றவற்றால் நிலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மண்புழு மற்றும் தாவரங்களுக்கு நன்மை செய்யும் உயிரினங்கள் மொத்தமாக அழிந்து வருகின்றன. மரம் வளர்ப்பு மற்றும் மர நடுவிழாக்கள் பெரிதும் விளம்பரத்திற்காகவும், புகைப்படத்திற்காகவும் மட்டுமே நடத்தப்படுகின்றன. சாலைகளுக்காவும், கட்டுமானங்களுக்காவும் அழிக்கப்படும் மரங்களைத் தடுத்தாலே புதிய மரங்களுக்கான தேவையே இருக்காது என்பதே உண்மை. அறிவியல் வளர்ச்சி தேவைதான் ஆனால் அபரிதமான அசுர வளர்ச்சியால் நாம் கண்களை இழந்து ஓவியத்தை வாங்குவதைப் போன்ற சூழல் உருவாகி வருவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே இக்கட்டுரை நம்முடைய முன்னோர்கள் எவ்வாறெல்லாம் இயற்கையைப் போற்றியுள்ளனர் என்பதையும், பல்லுயிர்ப் பெருக்கத்தை ஊக்கப்படுத்தியுள்ளனர் என்பதையும் பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்னுமாப்போலே திருஞானசம்பந்தர், தேவாரம் கொண்டு விளக்க முற்படுகிறது.

**பக்தி இலக்கியத்தில் பன்னிரு திருமுறையுள் தேவாரம்**

சைவ சமயத்தின் வேதமாகக் கருதப்பெறும் பன்னிரு திருமுறையில் தேவாரம் பாடிய மூவருள்ளும் இயற்கையை அதிகமாகப் பாடியவர் திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசர். தாம் செல்லும் தலங்களில் எல்லாம் இறைவனைப் பாடுமளவு இயற்கைச் சூழலையும் இணைத்தே பாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சோலை, நீர்நிலைகள், மலர்கள், பறவைகள், விலங்குகள், ஊர்வன என அனைத்து நிலைகளிலும் உயிரினங்களை, சம்பந்தர் தம் தேவாரம் வழிப் பதிவுசெய்துள்ளனர். அவர்கள் காட்டிய தலங்கள் அதே நிலையில் இன்றளவும் உள்ளதா என்று சென்று பார்த்தால் பலவிடங்களில் நமக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது. அந்தளவிற்கு இயற்கை அழிக்கப்பட்டு மாற்றமடைந்து கான்கிரீட் காடுகளாக மாறியுள்ளன என்பதைக் காணமுடியும்.

**திருஞானசம்பந்தர் பாடிய சோலைகள்**

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் அதிகமாக இடம்பெறுவன சோலைகளே என்றால் அது மிகையில்லை. அதற்கு மிக முக்கியமான காரணம் அந்தளவிற்கு அவர் காலத்தில் சோலைகள் இருந்தன, பாதுகாக்கப்பட்டன என்பதாகும். வழிபாட்டில் மலர்களே முதன்மை இடத்தைப் பெறுகின்றன. எனவே சோலைகள் நிறைந்திருந்தன. சான்றுகளாக,

**நாறுபூம்பொழில் நண்ணிய காழி**[1]

**விரைபுல்கு பைம்பொழில் சூழ்ந்த வேட்களம்** [2]

**வம்புலாம் பொழிலணி மயேந்திரப்பள்ளி** [3]

**களிமண்டு சோலை கழனிக் கலந்த**

**கமலங்கள் தங்கு மதுவில்...** [4]

**மந்தலாய மல்லிகையும் புன்னை வளர்குரவின்**

**பந்தலாரும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே.**[5]

**குரவப் பொழில் சூழ் குரங்காடு துறையே**[6]

என்பதைப் போல் நூற்றுக்கணக்கான இடங்களைக் காட்டலாம்.

**சம்பந்தர் பாடிய வண்டுகள், தும்பிகள், பறவைகள்**

சோலைகளைப் பாடிய சம்பந்தர் வண்டுகள், தும்பிகள், பறவைகள் என அனைத்து சோலைகளோடு தொடர;புடைய உயிரினங்களையும் கவனத்தோடு பதிவு செய்துள்ளார். வண்டுகளும் சிறு பூச்சியினங்களுமே சோலைகளைப் பெருக்குவதற்குப் பெருங்காரணிகளாக உள்ளன. மகரந்த சேர்க்கையின் மூலம் ஒரிடத்திலிருந்து மலர்களின் மகரந்தங்களைப் பல்வேறு இடங்களில் கொண்டு சென்று பரவிடச் செய்யும் பெரும் உதவியை இயற்கைக்குச் செய்கின்றன. வண்டுகளும் தும்பிகளும் மது எனும் தேன் உண்ணுதலோடு இப்பணியையும் நன்றிக்கடனாகச் செய்கின்றன. சம்பந்தர் தேவாரத்தில்,

**வண்டுலாம் பொழிலணி மயேந்திரப்பள்ளி**[7]

**தெளிமண்டி உண்டு சிறைவண்டு பாடும்**

**திருமுல்லைவாயிலிதுவே.**[8]

**மாதர் வண்டு தன்காதல் வண்டாடிய புன்னைத்**

**தாதுகண்டு பொழில் மறைந்தூடு சாய்க்காடே.**[9]

**வண்டுபாட மலரார் திருப்புன்கூர்** [10]

**வண்டு வாழ் பொழில் வாழ்கொளிப்புத்தூர்** [11]

எனவருவன வண்டுகள் மேவும் பொழில்களைச் சுட்டுகின்றன.

**பறவைகள்**

சம்பந்தர் தேவாரத்தில் கிளி, அன்னம், அன்றில், மயில், குயில், புறா, குருவி, நாரை, கழுகு முதலிய பல பறவைகள் இடம்பெறுகின்றன. வழிபாடு என்னும் நிலையில் தலங்களைப் பாடி வரும் சம்பந்தர் அங்குள்ள இயற்கையான சூழலில் காணப்படும் பறவைகளைப் பெரிதும் மகிழ்ந்து பதிவுசெய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாம். சான்றுகளாக,

**சிறையாரும் மடக்கிளியே இங்கே வா..** [12]

**முன்றில்வாய் மடற்பெண்ணைக் குரம்பைவாழ் முயங்குசிறை அன்றில்காள்...**[13]

**காண்டகைய செங்கால் ஒண்கழி நாராய்** [14]

**மாதவி மேய வண்டிசை பாட மயிலாட** [15]

**மயிலாரும் மல்கிய சோலை மணஞ்சேரி**[16]

**கலவ மஞ்ஞை உலவும் கருகாவூர்**[17]

**புள்ளினம் துயில் பயில் தருமபுரம் பதியே** [18]

. **...பைம்பொழில்வாய்க்**

**குயில்பெடையோடு பாடலுடையான்**[19]

**வண்டாமரை மலர்மேல் மட அன்னம் நடைபயில**

**வெண்டாமரை செந்தாதுதிர் வீழிம்மிழலையே.**[20]

**வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருள் சொல்லும்**[21]

எனவருவனவற்றைக் காட்டலாம். இதில் புள்ளினம் துயில் எனக்குறிப்பிட்டிருப்பதை நுண்ணிதின் ஆராய வேண்டும். பறவைகள் துயில்கின்ற சூழல் என்பது அத்தலம் மிக அமைதியாகவும் பறவைகள் அலமராமல் வசதியாகத் தங்கும் இடமாகவும் விளங்கியது என்பதைச் சுட்டுகிறது. இச்சூழலே பறவைகள் இனப்பெருக்கத்திற்கான ஏற்ற சூழல் என்பதைப் பறவையியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சங்க இலக்கியத்தில் போர் மேற் சென்று மீளும் தலைவன் காட்டின் வழி தேரில் வரும் போது தாது உண் பறவைகள் இணைந்திருக்கும் அகச்சூழலைக் கெடுக்காதவகையில் தன் தேரின் மணியினை ஒலிக்காத வண்ணம் கட்டி வைத்துக் காட்டைக் கடந்தான் என்பதும் பல்லுயிர்ப் பெருக்கச் சிந்தனையால் விளைந்ததே எனலாம்.

**சம்பந்தர் பாடிய நீர் வாழ் உயிரினங்கள்**

ISSN:2582-9599

பல்லுயிர்ப் பெருக்கத்தை வலியுறுத்திப் பாடும் சம்பந்தர் நீர்வாழ் உயிரனங்களையும் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளார;. மீன்கள் எனப் பொதுமையில் குறிப்பிட்டாலும், கயல், வாளை, கெண்டை, சங்கு, இப்பி, முத்து, சுறா, நண்டு, அலவன், முதலை, தவளை எனத் தனித்தும் சுட்டிப்பாடியுள்ளார;. சான்றுகளாக,

**வங்கமாரு முத்தம் இப்பி வார் கடலூடலைப்ப**[22]

**வளர் சங்கமெங்கும் மிகுக்கும் கலிக்காமூர்** [23]

**வெள்ளைச் சுரிச் சங்கு உலவித்திரியும் வெண்காடே**[24]

**செய்யருகே புனல்பாய ஓங்கிச் செங்கயல் பாய**[25]

**கயல் வயல் குதிகொளும் கழுமல வளநகர்** [26]

**மடையில் வாளை பாய** [27]

**மீன் தோயும் திசைநிறைய**[28]

**கெண்டை பாயச் சுனைநீல மொட்டலரும் கேதாரமே** [29]

எனவருவனவற்றைக் காட்டலாம். மருதநிலத்தைச் சுட்டும் போது சேல், கயல், கெண்டை என்னும் ஆற்று நீரில் வாழும் மீனங்களையும், நெய்தலைச் சுட்டும் போது முத்து, இப்பி, சங்கு, சுறா என்னும் கடல் நீர்வாழ் உயிரின வகைகளையும் குறிப்பிடுவதை நுணுக்கமாகக் காணலாம்.

**சம்பந்தர் பாடிய விலங்கினங்கள்**

திருஞானசம்பந்தர் பாடல்களில் அவ்வத்தலத்திற்குரிய மலர்கள், பறவைகள், செடி கொடி மரங்கள் மட்டுமல்லாமல் விலங்கினங்களையும் தெளிவாகப் பதிவுசெய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியர் குறிப்பிடும் திணைக் கருப்பொருள்களாகிய தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ் அனைத்தும் திருஞானசம்பந்தர் பாடல் வழி உணர முடிகிறது. ஐந்திணை விலங்குகளாக, யானை, மான், குரங்கு, பன்றி, கரடி, புலி, சிங்கம், வேங்கை, நாகம், காளை. பசு, எருது, ஆமை போன்ற பல விலங்குகள் குறிப்பிடப்பெறுகின்றன. சான்றுகளாக,

**மைம்மகஏந்திக் கடுவனொடூடிக் கழைபாய்வான்**

**செம்முகமந்தி கருவரையேறும் சிராப்பள்ளி** [30]

**புற்றில் வாள் அரவும் ஆமையும்** [31]

**வாள்வரி அதள்** [32]

**கோளரி உழுவையோடு கொலை யானை கேழல்**

**கொடுநாகமொடு கரடி** [33]

**கரியினொடு வரியுழுவை அரியினமும்** [34]

**வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்**

**கெண்டைபாயச்சுனைநீல மொட்டலரும் கேதாரமே.** [35]

**மடவார்கள் நடமாட முழவதிர மழையென்று அஞ்சி**

**சிலமந்திஅலமந்து மரம்ஏறி முகில்பார்க்கும் திருவையாறே.**[36]

**ஆமாம் பிணை வந்து அணையும் சாரல் அண்ணாமலை**

**ஆனைத் திரள் வந்து அணையும் சாரல் அண்ணாமலை**

**ஏனைத்திரளோடு இனமான் கரடி இழியும் சாரல்**

**அல்லாடு அரவம் இயங்கும் சாரல்** [37]

எனவருவனவற்றைக் காட்டலாம். மேலும் யானை, மான், மாடு, குரங்கு எனப் பொதுநிலையில் குறிக்கப்பட்டுள்ள பதிவுகளையும், அவற்றுள் ஆண் பெண் எனத் தனித்து, கடுவன் மந்தி, களிறு, பிடி, காளை, ஆநிரை எனவும், யானைகள் கூட்டமாகத் திரியும் இயல்புடையன என்னும் விலங்கியல் நுட்பத்தை ஆனைத்திரள் எனவும், பாம்புகள் இரவில் இரை தேடப்புறப்படும் என்பதை அல் ஆடு அரவம் இயங்கும் சாரல் அண்ணாமலை எனவும் சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாம். இன்று கிரிவலம் என்ற பெயரில் முழுமையாகக் காட்டையும் அதன் சூழலையும் மாற்றி, தார்ச்சாலைகள் அமைத்துவிட்ட காரணத்தால் யானைகள் மற்றும் பிற விலங்கினங்கள் செய்வதறியாது தம் வாழிடங்களைத் தொலைத்து மனிதர்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கும், விளைச்சல் நிலங்களுக்கும் படையெடுக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

திருஞானசம்பந்தர் காலத்தில் இருந்த வழிபாட்டு முறை ஆரவாரமற்றது. எளிய வழிபாடு இயற்கையைப் பாதுகாக்கும் வழிபாட்டு முறை. இன்னும் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமென்றால் இயற்கைதான் இறைவன் என்ற கொள்ளை மக்களிடம் இருந்தது. அண்ணாமலையார் என்று சம்பந்தர் மலையையே இறைவனாகப் பாடுகின்றார் என்றால் மலை மற்றும் அதனோடு தொடர்புடைய விலங்குகள், பறவைகள், பூச்சியினங்கள், சிறு உயிர்கள் என அனைத்தையும் பாதுகாக்க வேண்டும் என்கிற பல்லுயிர்ப் பெருக்கச் சிந்தனையால்தான் என்பதை நுண்ணிதின் உணரலாம்.

**தொகுப்புரை**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலான அருளாளர்கள் பக்தியை வழிபாட்டை மட்டும் பாட வந்தவர்கள் அல்லர் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் மிகச்சிறந்த சூழலியல் வல்லுநர்கள், பல்லுயிர்ப் பெருக்கச் சிந்தனையாளர்கள், இயற்கையின் மீது அளவுகடந்த காதல்

உடையவர்கள் என்பது அவர்கள் பாடல்கள் வழிப் புலனாகிறது. மேலும், மரம், செடி, கொடிகள், மலை, கடல், ஆறு, குளம், யானை, நாகம் முதலிய இயற்கை சார்ந்த உயிரினங்களையே பல்வேறு இடங்களில் இறைவனாகப் பார்த்துள்ளனர்.

பண்டைக் காலந்தொட்டு வேப்பமர வழிபாடும், துளசி வழிபாடும், மலை வழிபாடும் இருந்து வந்துள்ளமையை, சங்க இலக்கியந்தொட்டு இன்று வரை அறியலாம். தலமரங்கள் என்னும் நிலையில் ஒவ்வொரு தலத்திற்கும் ஒரு மரத்தை நட்டு வளர்த்துப் பாதுகாத்து அதற்குத் தெய்வத்தன்மையை ஏற்றிப் போற்றியுள்ளமை மரங்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினர்க்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாவே தோன்றுகிறது.

நீர்நிலைகளை, கங்கைக்கு நிகராகப் போற்றிப் பாடியதன் மூலம் அவை தூய்மையாகப் பாதுகாக்கப்பட்டதுடன் அதில் வாழும் பல்லாயிரக்கணக்கான உயிரனங்களையும் பேணிய பாங்கு பாராட்டிற்குரியதாம். தலங்களைப் பாடும் போது யானை, நாகம், நாரை, நண்டு, மீன், சிலந்தி என்பவை முதலாக எறும்பு ஈறாக (திருஎறும்பூர்) வழிபாடு செய்துள்ளதாகப் பதிவுகள் உள்ளன. இவை இறைவன் முன் அனைத்து உயிரினங்களும் சமம் என்ற கொள்கைளை மக்களிடம் ஏற்படுத்தி அவற்றையும் மனிதர்களுக்கு நிகராகப் போற்ற வேண்டும் என்ற பல்லுயிர்ச் சிந்தனையைத் தூண்டுகிறது. பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் எனவும், பகுத்துண்டு மனிதர்களைப் போற்றுவதை மட்டும் பாடாமல் நம் வள்ளுவர் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் எனவும் பாடியிருப்பதை ஈண்டு ஒப்பு நோக்கலாம்.

**நிறைவுரை**

எனவே நம் தமிழரின் மரபுகளைப் பண்பாட்டை மீட்டெடுக்க ஜல்லிக்கட்டு மட்டும் போதாது. ஒவ்வொரு உயிரினப் பாதுகாப்பு எனும் பண்டைத் தமிழரின் பல்லுயிர்ப் பெருக்கச் சிந்தனையும் வேண்டும். இயற்கையில் எல்லா உயிர்களும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு உரிமை உண்டு என்பதை உணர வேண்டும். இயற்கையை அளவாகத் துய்க்க ஒவ்வொருவரும் உறுதியேற்றால்தான் இது சாத்தியமாகும். இளையோர்க்குப் பள்ளிக் கல்வி முதல் பல்லுயிர்ப் பெருக்கச் சிந்தனையை, இயற்கைப் பாதுகாப்பின் தேவையை, மாசற்ற சுற்றுச்சூழல் அவசியத்தை உணர்த்த வேண்டும். இயற்கையைப் போற்றுவதும் பாதுகாப்பதும், பல்லுயிர்ப் பெருக்கத்தை ஆதரிப்பதும் தான் இறை வழிபாடு என்பதை உணர்வோம். உறுதியேற்போம்.

**அடிக்குறிப்புகள்.**

1. 3 : கோயில் : 11
2. 2 : தென்திருமுல்லைவாயில்: 1
3. 3 : மயேந்திரப்பள்ளி : 11
4. 1: வேட்களம் : 4
5. 1: பல்லவனீச்சரம் : 7

6. 2: குரங்காடுதுறை :1
7. 3: மயேந்திரப்பள்ளி :2
8. 2: தென்திருமுல்லைவாயில்: 1
9. 2: சாய்க்காடு:7
10. 1:திருப்புன்கூர் : 10
11. 2: வாழ்கொளிப்புத்தூர:10
12. 1:திருத்தோணிபுரம்:10
13. 1: தோணிபுரம் : 7
14. 1: தோணிபுரம்: 4
15. 1:புறவம்:2
16. 2:திருமணஞ்சேரி:1
17. 3:திருக்கருகாவூர்: 11
18. 1:தருமபுரம்:6
19. 3:திருக்குடமூக்கு:3
20. 1:திருவீழிமிழலை:9
21. 1:வீழிமிழலை:1
22. 1:பல்லவனீச்சரம்:9
23. 3: கலிக்காமூர்: 2
24. 2:வெண்காடு:5
25. (1:கீழைத்திருக்காட்டுப்பள்ளி:1
26. 2:கேதாரம்:1
27. 1:கோலக்கா:1
28. 2:திருநல்லூர்:7
29. 3:கழுமலம்:4
30. 1:திருச்சிராப்பள்ளி:2
31. 3:சீர்காழி:6
32. 2:பொது:6
33. 2: கோளறுபதிகம் :6
34. 3:காளத்தி:8
35. 2:திருக்கேதாரம்:1
36. 1:ஐயாறு:1
37. 1: திருவண்ணாமலை

**துணைநூற்பட்டியல்**

1. அருணைவடிவேலுமுதலியார் (உ,ஆ), திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் மூன்று

திருமுறைகள், தருமையாதீன வெளியீடு, தருமபுரம், 1997 .

2. திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2002.
3. தேவநேயப்பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுரை, தமிழ்மண்பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 1997.
4. பாலசாரநாதன் (ப.ஆ), திருத்தலங்கள் வரலாறு, டாக்டர் உ,வே, சாமிநாததையர் நூல் நிலையம், சென்னை, ஐந்தாம் பதிப்பு 2017.